




# உயர்கல்வித் துறை

## மானியக் கோரிக்கை எண் : 20

அறிவிப்புகள்

2023–2024

# உயர்கல்வித்துறை

## மானியக் கோரிக்கை எண். 20

## அறிவிப்புகள்
## 2023 - 2024


முனைவர் க. பொன்முடி

உயர்கல்வித்துறை அமைச்சர்

# உயர்கல்வித்துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உயர்கல்வித்துறை சார்பில் 23 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**முனைவர் க. பொன்முடி**

**உயர்கல்வித்துறை அமைச்சர்**

1) அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் நிறுவன வளத் திட்டமிடலுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பு மென்பொருள் ரூ.150.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**(Implementation of Learning Management System integrated with an Enterprise Resource Planning Software in all Higher Education Institutions at the cost of Rs.150.00 crore)**

உயர்கல்வித்துறையில் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தவும் வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்ப மேம்படுத்தப்பட்ட பாடங்களை வழங்குவதற்காகவும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை அதிகரிக்கவும், அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் நிறுவன வளத் திட்டமிடலுடன் ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் மேலாண்மை அமைப்பு மென்பொருள் (LMS & ERP Software) ரூ.150.00 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

2) 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழிலகங்களின் தேவைகளுக்கேற்ப புதிய தொழிலிடைக் கல்வி பட்டயப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

**(Introduction of Industry Aligned New Sandwich Diploma programs in 5 Government Polytechnic Colleges)**

தொழிலகங்களின் தேவைகளை நிறைவேற்றும் விதமாகவும், மொத்த மாணாக்கர்கள் சேர்க்கையை அதிகரிக்கும் விதமாகவும், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் (Guidance Tamil Nadu) மற்றும் தொழிலகங்களுடன் இணைந்து பின்வரும் 5 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிய தொழிலிடைக் கல்வி (Sandwich) பட்டயப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்:

- மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் (சாண்ட்விச்) பட்டயப்படிப்பு - மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை.

  அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.

\

- நெசவு தொழில்நுட்பம் (சாண்ட்விச்) பட்டயப்படிப்பு - அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கரூர்.

- கணினி பொறியியல் (சாண்ட்விச்) பட்டயப்படிப்பு - அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.

- இயந்திரவியல் (சாண்ட்விச்) பட்டயப்படிப்பு - அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி\ விழுப்புரம்.

3) அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகளிலும் மேம்படுத்தப்பட்ட உற்பத்திக்கான சிறப்பு மையங்கள் அமைக்கப்படும்.

**(Establishment of Center of Excellence (CoE) for Advanced Manufacturing in all Government Engineering Colleges)**

தற்போது தொழிலகங்களின் பயன்பாட்டில் உள்ள மரபுசாரா உற்பத்தி இயந்திரங்கள், விரைவான மாதிரி தயாரிக்கும் தொழில்நுட்பம், முப்பரிமாண உற்பத்தி தொழில்நுட்பம் போன்ற மேம்படுத்தப்பட்ட உற்பத்திக்கான தொழில்நுட்பங்களுக்கு ஏற்றவாறு மாணாக்கர்களின் வேலைவாய்ப்புத் திறன், ஆய்வுத்திறன், புத்தாக்கத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை மற்றும் தனியார் நிறுவனத்துடன் இணைந்து அனைத்து அரசு பொறியியல் கல்லூரிகளிலும் கணினிவழி கட்டுப்பாட்டு (Computer Numerical Control) இயந்திரங்கள் பயன்பாட்டுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட உற்பத்திக்கான சிறப்பு மையங்கள் அமைக்கப்படும்.

4) 7 அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் 31 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு 1 Gbps அளவிலான தொடர் இணையதள வசதி ஏற்படுத்தப்படும்.

**(Provision of 1 Gbps Internet Leased Line to 7 Government Engineering and 31 Government Polytechnic Colleges)**

மாணாக்கர்களின் தற்போதைய தொழில்நுட்பக் கற்றலைப் பூர்த்தி செய்ய தொடர் இணையதள வசதி இணைப்பு தேவைப்படுவதால், தமிழ்நாட்டில் உள்ள 4 அரசு பொறியியல் கல்லூரிகளிலும், 23 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் தொடர் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டது. மீதமுள்ள 7 அரசு பொறியியல் கல்லூரிகளிலும், 31 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் கண்ணாடியிழை மூலமாக 1 Gbps அளவிலான தொடர் இணையதள வசதி இணைப்பு வழங்கப்படும்.

5) மாற்றுத்திறனாளி மாணாக்கர்களின் நலனுக்காக சென்னை, மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய திறன் பயிற்சி மையம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**(Establishment of New Skill Training Centre for the welfare of Differently-abled students in Central Polytechnic College, Chennai at the cost of Rs.50.00 lakh)**

செவித்திறன் குறைந்த மற்றும் வாய் பேச இயலாத மாற்றுத்திறனாளி மாணாக்கர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பற்றவைத்தல், மின்னணுவியல் பாகங்களைத் தொகுத்தல், மின்னணுவியல் பலகைகளை பரிசோதித்தல் ஆகிய திறன்களில் பயிற்சி அளிப்பதற்காக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் நிதியுதவியுடன் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, மைய பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய திறன் பயிற்சி மையம் அமைக்கப்படும்.

6) கோயம்புத்தூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மின்சார வாகன இயக்க மையம் நிறுவப்படும்.

**(Establishment of Electric Vehicles Mobility Centers at Government Polytechnic College and Government Polytechnic College for Women in Coimbatore)**

மாணவ, மாணவியர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்காக, FaMe TN மற்றும் Smart e-Mobility என்ற இரு நிறுவனங்களிடமும் இணைந்து, கோயம்புத்தூரில் செயல்பட்டுவரும் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அரசு மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மின்சார வாகன இயக்க மையம் நிறுவப்படும். இம்மையத்தில் மாணாக்கர்களுக்கு மின்சார வாகனம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும்.

7) "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், கட்டமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்.

**(Introduction of Curriculum structure under "Naan Mudhalvan" Scheme in all Polytechnic Colleges)**

" நான் முதல்வன்" திட்டத்தின் கீழ், கட்டமைக்கப்பட்ட பாடத்திட்டங்கள் அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் அறிமுகப்படுத்தப்படும். இதனால், மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பை மேம்படுத்தும் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிலகங்களுக்கு இடையே உள்ள இடைவெளி குறைக்கப்படும்.

8) அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் புதிதாக தொடங்கப்பட்ட பாடப்பிரிவுகளுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**(Procurement of Machineries and Equipments for newly started courses in Government Polytechnic Colleges at the cost of Rs.10.00 crore)**

தொழிலகங்களின் தேவையை பூர்த்தி செய்ய, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2022-23 ஆம் கல்வியாண்டில் புதிதாக தொடங்கப்பட்ட ஆடை தொழில்நுட்பம், வேளாண் தொழில்நுட்பம், எந்திர மின்னணுவியல், தளவாட தொழில்நுட்பம் மற்றும் தானியங்கி பொறியியலில் இடையீட்டு தொழில்நுட்பப் பாடப்பிரிவு (Sandwich) ஆகிய பட்டயப்படிப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

9) 3 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணாக்கர்கள் கல்வி பயிலும் பொழுதே வருமானம் ஈட்டும் பட்டயப்படிப்பு அறிமுகப்படுத்தப்படும்.

**(Introduction of Diploma Programme of Earn While Learn by students in 3 Government Polytechnic Colleges)**

தொழிலகங்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், மாணாக்கர்கள் கல்வி பயிலும் பொழுதே தங்களின் தகுதியை மேம்படுத்தி வருமானம் ஈட்டும் வகையில் ஓசூர், டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஊத்தங்கரை, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கெலமங்கலம், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தருமபுரி மாவட்டம் கடத்தூர், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய 3 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணாக்கர்கள் கல்வி பயிலும் பொழுதே வருமானம் ஈட்டும் (Earn While Learn) பட்டயப்படிப்புகள் அறிமுகப்படுத்தப்படும்.

10) 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை வணிக மேலாண்மை பட்டப்படிப்பும் (MBA), 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுநிலை கணினி பயன்பாட்டியல் (MCA) பட்டப்படிப்பும் தொடங்கப்படும்.

**(Introduction of MBA course in 5 Government Arts and Science Colleges and MCA course in 5 Government Arts and Science Colleges)**

பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணாக்கர்களுக்கு தொழில்நுட்பப் பாடப்பிரிவில் தரமான கல்வியை வழங்குவதற்காக, 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலை வணிக மேலாண்மை பட்டப்படிப்பும் (MBA), 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுநிலை கணினி பயன்பாட்டியல் பட்டப்படிப்பும் (MCA) தொடங்கப்படும்.

**M.B.A.** பட்டப்படிப்பு தொடங்கப்படும் கல்லூரிகள் :

1. அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), சேலம்
2. சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்
3. அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சாத்தான்குளம்
4. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தொண்டாமுத்தூர்
5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆர்.கே.நகர், சென்னை.

**M.C.A.** பட்டப்படிப்பு தொடங்கப்படும் கல்லூரிகள் :

1. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
\ திருப்பத்தூர்
2. தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சி
3. அரசு கலைக் கல்லூரி, உதகமண்டலம்
4. ராணி மேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை
5. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,\ வால்பாறை

11) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தானியங்கி நாப்கின் வழங்கும் இயந்திரம் மற்றும் நாப்கின் எரிப்பான் இயந்திரம் வழங்கப்படும்.

**(Procurement of Napkin Vending Machines and Incinerator in Government Arts and Science Colleges)**

89 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ஏற்கனவே நாப்கின் வழங்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 7 மகளிர் கல்லூரிகளுக்கு தலா 2 எண்ணிக்கையிலும், 72 இருபாலர் கல்லூரிகளுக்கு தலா 1 எண்ணிக்கையிலும் 86 நாப்கின் வழங்கும் இயந்திரங்கள் ரூ.43.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மேலும் 168 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் நாப்கின் எரியூட்டி இயந்திரங்கள் வழங்கப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.1.69 கோடி பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து (CSR Fund) மேற்கொள்ளப்படும்.

12) 2012-13 ஆம் ஆண்டு மற்றும் 2022-23 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.68.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**(Construction of New Buildings for 5 Government Arts and Science Colleges established during 2012-13 and 2022-23 at the cost of Rs.68.55 crore)**

2012-13 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தொடர்ந்து வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் திருவொற்றியூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் 2022-23 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட செஞ்சி, வடலூர், ஸ்ரீபெரும்புத்தூர் மற்றும் நாட்றாம்பள்ளி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆக மொத்தம் 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு தலா ரூ.13.71 கோடி வீதம் புதிய கட்டடங்கள் ரூ.68.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

13) பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.180.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**(Modernization of Infrastructure facilities in Government Colleges under Perundalaivar Kamarajar College Development Scheme at the cost of Rs.180.00 crore)**

அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளான ஆய்வகங்கள், கழிவறைகள் மற்றும் கூடுதல் வகுப்பறைகள் போன்ற பணிகள் பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.180.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

14) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதியதாக கட்டப்பட்ட வகுப்பறைகளுக்குத் தேவையான தளவாடங்கள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

**(Procurement of required equipments and furniture for the newly constructed class room buildings in Government Arts and Science Colleges at the cost of Rs. 10.00 crore)**

28 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிதாக கட்டப்பட்ட 446 வகுப்பறை கட்டடங்களுக்குத் தேவைப்படும் தளவாடங்களான மாணாக்கர்கள் அமரும் இருக்கைகள் மற்றும் மேசைகள், ஆசிரியர்களுக்கான மேசைகள் மற்றும் வகுப்பறைகளுக்கான செராமிக் பலகைகள் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

15) அண்ணா பல்கலைக்கழக சென்னை தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் கூடுதல் உணவுக்கூடம் ரூ.5.87 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**(Construction of additional Dining Hall in the MIT campus of Anna University at the cost of Rs.5.87 crore)**

அண்ணா பல்கலைக்கழக சென்னை தொழில்நுட்ப நிறுவன வளாகத்தில் (MIT campus) மாணாக்கர்களின் தேவைக்கேற்ப ஏற்கனவே உள்ள உணவுக் கூடத்தை விரிவுபடுத்தி கூடுதலாக தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய உணவுக்கூடம் ரூ.5.87 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

16) அண்ணா பல்கலைக்கழகத்தின் கிண்டி பொறியியல் வளாகத்திலுள்ள விடுதிகளில் இணையவசதி (Networking facility) ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**(Establishment of Networking facility in Hostels of Guindy Engineering College Campus, Anna University at the cost of Rs.1.08 crore).**

அண்ணா பல்கலைக்கழக கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் (CEG campus) உள்ள 22 விடுதி கட்டடங்கள் மற்றும் 1 உணவுக் கூடம் ஆகியவற்றில் ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் இணைய வசதி ஏற்படுத்தப்படும்.

17) அண்ணா பல்கலைக்கழக கோயம்புத்தூர் மண்டல வளாகத்தில் புதிய கல்விக் கட்டடம் ரூ.15.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

**(Construction of New Academic Block in Coimbatore Regional Centre of Anna University at the cost of Rs.15.51 crore)**

அண்ணா பல்கலைக்கழக கோயம்புத்தூர் மண்டல வளாகத்தில் தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய புதிய கல்விக் கட்டடம் (New Academic Block) ரூ.15.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

18) மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் 5 புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்படும்.

**(Introduction of 5 new courses in Madurai Kamaraj University)**

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் B.Sc. Computer Science (Data Science), B.Sc. Computer Science (Cyber Security) மற்றும் B.Com (Block-Chain Technology) ஆகிய மூன்று இளங்கலைப் பாடப்பிரிவுகள் மற்றும் M.Sc Artificial Intelligence மற்றும் M.Sc Machine Learning ஆகிய இரண்டு முதுநிலை பாடப்பிரிவுகள் என ஆக மொத்தம் 5 புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்படும்.

19) மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் மனிதவள மேம்பாட்டு பயிற்சி அரங்கம் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**(Establishment of Human Resource Development Training Auditorium in Madurai Kamaraj University at the cost of Rs.3.50 crore).**

மதுரை காமராசர் பல்கலைக்கழக முதுகலை மாணாக்கர்கள், ஆராய்ச்சி மாணாக்கர்கள், ஆசிரியர்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு வேலைவாய்ப்புக்கான பயிற்சி மற்றும் பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குவதற்காக, மதுரை காமராசர் பல்கலைக்கழக வளாகத்தில் 500 இருக்கைகள் கொண்ட மனிதவள மேம்பாட்டு பயிற்சி அரங்கம் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் தேசிய உயர்கல்வித் திட்ட நிதியிலிருந்து (RUSA Fund) நிறுவப்படும்.

20) சென்னை பல்கலைக்கழகத்திலுள்ள புகழ்பெற்ற நூற்றாண்டு விழா மண்டபம் புதுப்பிக்கப்படும்.

**(Renovation of Centenary Building of University of Madras).**

சென்னை பல்கலைக்கழகத்தில் தற்போது சேதமடைந்துள்ள, 3000க்கும் அதிகமான இருக்கைகள் கொண்ட புகழ்பெற்ற நூற்றாண்டு விழா மண்டபம், அதன் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.

21) சென்னை பல்கலைக்கழகத்தின் சேப்பாக்கம் வளாகத்தில் பெண்கள் விடுதி கட்டப்படும்.

**(Construction of Women's Hostel in Chepauk campus, University of Madras).**

சென்னை பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் பழமையான முதன்மையான பல்கலைக்கழகமாகும். இங்கு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அதிக எண்ணிக்கையில் சேர்க்கை பெற்று, கல்வி பயின்று வரும் மாணவியரின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி, சென்னை பல்கலைக்கழகத்தின் சேப்பாக்கம் வளாகத்தில் 250 மாணவிகள் பயனடையும் வகையில் பெண்கள் விடுதி கட்டடம் கட்டப்படும்.

22) தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கு ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

**(Scholarship for Research Students to undertake Research in the Tamil Nadu Archives and Historical Research Department).**

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையில் பாதுகாக்கப்பட்டு பலவகைப்பட்ட அரிய ஆவணங்களை பயன்படுத்தி கருப்பொருள் அடிப்படையிலான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு இளைய தலைமுறையினரை ஊக்குவிப்பதற்காக சோதனை அடிப்படையில் 2 ஆண்டுகளுக்கு, ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கு மாதம் ரூ.10,000/- வீதம் உதவித் தொகை வழங்கப்படும்.

23) அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் குறைவான மாணாக்கர் சேர்க்கை உள்ள ஒரு சில பாடப்பிரிவுகளை நீக்கி, புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்படும்.

**(Closing the under-performing courses and introducing New Courses in Government Arts and Science Colleges).**

ஒரு சில அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணாக்கர்களிடையே வரவேற்பு இல்லாத, மாணாக்கர் சேர்க்கை மிகவும் குறைவாக உள்ள பாடப்பிரிவுகளை மட்டும் நீக்கம் செய்து விட்டு, அந்தப் பாடப்பிரிவுகளுக்கு பதிலாக தேவையின் அடிப்படையிலான பாடப்பிரிவுகள் மற்றும் வேலைவாய்ப்பு அதிகம் உள்ள புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்படும்.

**முனைவர் க. பொன்முடி**

**உயர்கல்வித்துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை-600 001.